சென்னை–6, தொழிலாளர் கூடுதல் ஆணையர் (நிர்வாகம்)
அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்: முனைவர் பா. மு. சரவணன், எம். ஏ., எம்.பி.ஏ., பி. எல்., எம். பில்., பி. எச்டி.,

கருக்கம்

பணிக்குழு – தொழிலாளர்துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – சில இளநிலை உதவியாளர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் சென்னை, தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் பணிநியமனம் செய்யப்பட்டது – பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்தும் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் உத்தரவிடப்படுகிறது.

---

ஜி3/44771/2019

நாள்:21.11.2019

படிக்கப்பட்டது

1 தமிழ்நாடுஅரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடித எண். 1022/ஒருங்குமு2/2019, நாள். 18.02.2019.

2 சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண். ஜி3/44771/2018, நாள். 01.03.2019.

******

ஆணை:

சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, மேலே 1–ல் படிக்கப்பட்ட கடிதத்தின் வாயிலாக தொழிலாளர் துறையில் பணிநியமனம் வழங்கும் பொருட்டு, ஒதுக்கீடு செய்யப்பட்ட நபர்களில் மேலே 2–ல் படிக்கப்பட்ட செயல்முறை ஆணைகளின்படி, கீழ்க்காணும் பட்டியலின் கலம் 2–ல் காணும் 8 தெரிவாளர்களுக்கு இளநிலை உதவியாளர்களாகப் பணிநியமனம் செய்யப்பட்டு, சென்னை, தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் பணியமர்த்தி உத்தரவு வழங்கப்பட்டது. அவர்கள், சென்னை, தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் கலம் 3–ல் காணும் நாள் முதல் இளநிலை உதவியாளர்களாக பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்கள்.

அவர்களது தெரிவு உறுதி செய்யப்படுவதாக மேலே 1–ல் படிக்கப்பட்ட தேர்வாணைய கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதால், அவர்களது பணியினை தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த கலம் 3–ல் குறிப்பிடப்பட்டுள்ள நாள் முதல் பணிவரன்முறை செய்யப்பட வேண்டும்.

மேலும், தனியர்களது பணியினை கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்யப்படுவதாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அறிவுறுத்தியுள்ளது.

"The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Coimbined Civil Service Examination- IV for the year 2015-2016, **2016-2017 and 2017-2018** recruitment."

எனவே, தனியர்களது பணியினை சென்னை/மதுரை கிளை உயர்நீதிமன்றங்களில் 2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018-ம் ஆண்டில் தொகுதி–IV-ன் தெரிவிற்கெதிராக நிலுவையிலுள்ள ரிட் மனுக்களின் இறுதி தீர்ப்பிற்குட்பட்டு தனியர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறை செய்யப்படுகிறது.

| வ. எண். | தெரிவாளர்களின் பெயர் | இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப் படுத்தப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | ஆ. ஆல்பர்ட், | 08.03.2019 முற்பகல் | 08.03.2019 முற்பகல் |
| 2 | எ. அமலோற்பவ சகிலா | 08.03.2019 முற்பகல் | 08.03.2019 முற்பகல் |
| 3 | ட்டி. தினேஷ் | 08.03.2019 முற்பகல் | 08.03.2019 முற்பகல் |
| 4 | கே.சித்ரா | 01.04.2019 முற்பகல் | 01.04.2019 முற்பகல் |
| 5 | வி.விஜயலட்சுமி | 11.03.2019 முற்பகல் | 11.03.2019 முற்பகல் |
| 6 | எஸ். மணிகண்டன் | 20.03.2019 முற்பகல் | 20.03.2019 முற்பகல் |
| 7 | இ.ஏ. ரகம்மது நிஷா | 08.03.2019 முற்பகல் | 08.03.2019 முற்பகல் |
| 8 | எஸ். மூர்த்தி | 19.06.2019 முற்பகல் | 19.06.2019 முற்பகல் |

மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 28-ன் படியும் மற்றும் தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் பொது விதி 32-ன் கீழ் இளநிலை உதவியாளர் பதவியில் மேற்காணும் நபர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் மூன்றாண்டு கால தொடர் பணியில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தில் வைத்து உத்தரவிடப்படுகிறது.

மேற்காணும் நபர்கள், மேற்படி தகுதிகாண் பருவ காலத்தில் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் இளநிலை உதவியாளர்களுக்கு அளிக்கப்படும் அடிப்படைப் பயிற்சியினை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டும் என்றும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்விலும் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/–பா. மு. சரவணன்,
கூடுதல் தொழிலாளர் ஆணையர்
(நிர்வாகம்).

பெறுநர்
கலம் 2–ல் காணும் இளநிலை உதவியாளர்கள், இவ்வலுவலகம்.

நகல்: 1. இவ்வலுவலக ஜி4 இருக்கை.
2. பணிப்பதிவேடு/உதிரி.

//அனுப்பப்படுகிறது//

21/11/19
கூடுதல் தொழிலாளர் ஆணையருக்காக
(நிர்வாகம்)

21/11/2019